தொல்காப்பிய மன்றம் - கனடா

Association for Tolkappiyam - Canada

தொல்காப்பிய வழி, தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம்

பிரிவு - 2 (2017 இல் பிறந்தோர்)

# நாம் தமிழர்

நாம் தமிழர். எமது தாய் மொழி தமிழ் மொழி. தமிழ்மொழி எமது அடையாளம். எமது தாய்மண் தமிழீழமும் தமிழ்நாடும் ஆகும். மொழியால் பெருமை பெற்ற இனம் தமிழ் இனம். உலகில் வாழும் மொழிகளுள் தொன்மையான மொழி தமிழ்.

இன்று உலகின் பல்வேறு நாடுகளிலும் தமிழர் வாழ்கிறார்கள். தமிழர் பெருமை உலகெங்கும் பேசப்படுகிறது. இதனையே நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அவர்கள்,

“தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடை வழியாகும்” - என்றார்.

தமக்கென ஒரு தனிப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் உடையவர்கள், தமிழர். இதனையே, கணியன் பூங்குன்றனார்,

“யாதும் ஊரே, யாவரும் கேளிர்” - என்றார்.

உலகப் பொதுமறையாம் திருக்குறளை எழுதியவரும் ஒரு தமிழரே.

நாம் கனடாவில் வசிக்கிறோம், ஆங்கிலத்தில் கல்வி கற்கிறோம். **இரண்டாம் மொழியாகத் தமிழைப் பாடசாலையிலும் வீட்டிலும் படிக்கிறோம். தாய்மொழிக் கல்வியும் அவசியம்** என்பதை நாம் உணர்கிறோம்.

தமிழ் எமது வீட்டு மொழி. உறவினர்களுடனும் நண்பர்களுடனும் தாய்த் தமிழில் பேசி உறவாடுவோம்.

தமிழ் பேசத் தெரிந்த தமிழராக வாழ்வோம்.

**நன்றி, வணக்கம்.**